www.tamilarangam.net

# நவ சகாப்தம்

- இலங்கைத் தீவின் தற்போதைய நிலை தொடர்பாக, அனைத்து முற்போக்குச் சக்திகளாலும் முன் வைக்கப்படவேண்டிய முழக்கங்கள்,
- தெற்காசிய பிராந்தியத்தை வல்லரசு மேலாதிக்கத்திலிருந்து பாதுகாத்திட உறுதிபூண்போம். இப்பிராந்தியததை சோசலிச முகாமின் அங்கங்களாக்கிட உழைத்திடுவோம்.
- இப்பிராந்திய தேசங்களிடையே சமத்துவ உறவுக்காக தேச எல்லைகளைக் கடந்து ஒன்றுபட்டு போராடுவோம்.
- இன-மத-மொழி பேதங்களைந்து இலங்கையர் என்னும், நாட்டுப்பற்றை வளர்த்திடுவோம்.
- தமிழீழ, சிறிலங்கா தேசங்களின் தேசத்துரோகிகளையும், இனவெறியர்களையும் வெற்றி கொள்வோம்.
- இலங்கைத் தீவின் இறைமையைப் பாதுகாக்க ஓரணி திரள்வோம் அனைத்து அந்நிய அரசியல், பொருளாதார, ராணுவ ஆக்கிரமிப்பாளர்களையும் விரட்டியடிப்போம்.
- தமிழீழ தேச இறைமைக்கான போராட்டத்தை தொடர்வோம்.
- அந்நிய ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள அனைத்துச் சக்திகளுக்கும் இடையே நேசஉறவை ஏற்படுத்த உழைத்திடுவோம், ஐக்கியத்துக்கு தடையாக இருக்கும் ஜனநாயக விரோத போக்குகளை எதிர்த்துப் போராடுவோம்
- சிறிலங்காவினதும் தமிழீழத்தினதும் அனைத்து ஜனநாயக, தேசபக்தசக்திகளினதும், சுதந்திர அரசியற் செயற்பாடு உட்பட்ட அனைத்து ஜனநாயக உரிமைகளையும் உத்திரவாதப்படுத்த போரிடுவோம்.
- மக்கள் ஜனநாயகக் குடியரசை நோக்கி முன்னேறுவோம்
- இலங்கைத் தீவின் இன்றைய உடனடி முழக்கம்.
- இந்திய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிப்போம்.

பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்(PROVA) வெளியீடு:2 அக்டோபர் 87

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நவ சகாப்தம்**

அக்டோபர் -1987
வெளியீடு—2

நன்கொடை
ரூபாய் இரண்டு

ஆசிரியர்
ஏ.ஜி. காந்தன்

வெளியிட்டோர்
நவசகாப்தம்
வெளியீட்டகம்

இதழ் குறித்த
அனைத்துத்
தொடர்புக்கும்:

எஸ். சந்திரன்
18, செட்டிகுளம்,
தருமராஜா கோயில்
தெரு,
பெரிய காஞ்சிபுரம்,
631502.

# ஆசிரியர் குறிப்பும், முன்னுரையும்

## முதல் இதழ்க் கூற்றின் மீள் நோக்கு.

நவ சகாப்தம் முதலாவது இதழ். இலங்கைத்தீவில் 198 ஜூலை மாதம் வரை நிலவிய யுத்த தேக்கநிலையைப் பற்றிய கட்டுரையைத் தாங்கி வெளிவந்தது. இந்தியஅரசின் நடுநிலை நிலைபாடுள்ள இராணுவ தலையீடு ஒன்று மாத்திரமே இத்தேக்க நிலையை உடைக்கும் தகைமை பெற்றது என அக்கட்டுரை கூறியது. இந்திய அரசின் வரையறைகள் இவ்வித தலையீட்டை சாத்தியமாக்குமா என்பது சந்தேகமே எனவும் அது கூறியிருந்தது. இந்திய மத்திய அரசின் இராணுவம் தலையிட்டது; ஆனால் நடு நிலையாக அல்ல. அதிகாரத்தில் உள்ள ஒரு சில தேசத் துரோகிகளின் அழைப்பின் பேரில் அது இலங்கையை ஆக்கிரமித்தது. இந் நி ழ்ச்சி தொடர்கின்றது.

பழைய யுத்த தேக்க நிலை உடைத் தெறியப்பட்டது. சமாதானம் ஏற்படுவதற்கு பதிலாக யுத்தம் புதிய உள்ளடக்கத்தையும், உருவத்தையும், பரப்புகளையும், வீச்சையும் பெற்றதாய் மாறியுள்ளது.

இலங்கை இராணுவத்தால் செய்ய இயலாது போன, எல்.டி.டி.ஈ.யை முற்றாக அழித்தொழிப்பதும் ஜே. ஆரின் இராணுவ சர்வாதிகாரத்தை பாதுகாப்பதுமான இரு கடமைகளையும் இன்றுஇந்தியஇராணுவம்நிறைவு செய்யும்முயற்சியில் மூர்க்கத்தனமாக ஈடுபட்டுள்ளது. இது விடயத்தில் அது தற்காலிகமான சில இராணுவ வெற்றிகளை ஈட்டியிருந்தாலும், இனி அடைய இருந்தாலும், பாரதூரமான அரசியல் தோல்விகளைஅது ஏற்கனவே பெற்றுவிட்டது; இனியும் பெறவுள்ளது தற்போது இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் தோன்றியுள்ள புதிய யுத்தநிலைமை இந்திய அரசு உட்பட யாருமே எதிர்பாராததொன்றுதான்.

யுத்த முறைகள் பற்றியபிரச்சனைகளையும் சென்ற இதழ் தொட்டுச் சென்றது. தேசிய விடுதலை யுத்தத்தில் கொரில்லா யுத்தமுறையின் அபார சக்திபற்றியும், அதேநேரத்தில் யுத்தத்தின் அனைத்துக் கட்டங்களுக்கும் அதுதான் ஒரே வழியாக பிரயோகிக்கப்படக் கூடாது, பிரயோகிக்கப்படவும் முடியாது என்பதையும் முன்னைய இதழ் சுட்டிக் காட்டியிருந்தது. நகர்புற கொரில்லா யுத்தத்தின் அபாரசக்தியை யாழ் நகரில் கடந்த சுமார் 10நாட்களாக நடைபெறும் போர் நடவடிக்கை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. அதே நேரத்தில் இந் நடவடிக்கை எதிரியின் படை நகர்வுக்கு தொல்லை கொடுக்கும் தன்மையை பெற்ற தொன்றாக மாத்திரமே அமையுமாகையால் யாழ் நகரம் இந்திய இராணு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கொரில்லா யுத்தத்திற்கு திரும்புவதென்பது தமிழ் ஈழ விடுதலை யுத்தம் 70ம் ஆண்டுகளின் பிற்பகுதிகளுள் மீண்டும் பிரவேசிக்க வேண்டும் என்பதேயாகும். யுத்த முறைதான் மீள திரும்புகிறதே தவிர, யுத்தத்தின் அரசியல் உள்ளடக்கமும், யுத்தத்தின் இராணுவ உள்ளடக்கமும் முன்பைவிட உயர்ந்த கட்டத்தை அடைந்துள்ளதுடன், அதன் பூகோள பரப்பளவும் தமிழ் ஈழத்திற்கும் அப்பால் மிகப் பரந்தளவு விஸ்தரிக்கப்படுவதற்கான வாய்புகளையும் பெற்றுள்ளன.**

வத்தின்கைகளில் விழப்போவது அனைவருக்கும் தெரிந்த உண்மையேயாகும்.

அடுத்த கட்டம் என்ன என்பதே இன்று எல்லார் முன்னும் உள்ள கேள்வியாகும். எல்.டி.டி.ஈ. யைஒரு ஆயுதகுழு என்ற நிலையில் இருந்து முழுமையாக அழிப்பதில் வெற்றி காண்பதே இந்திய அரசின் நோக்கமாகும். அதன் பின்புதான் எல்.டி.டி.ஈ.யையும்உள்ளடக் ஒரு இடைக்கால அரசாங்கம் அமையப் பெறும். கிய இவ்வித ஒரு நிலைக்கு தன்னைதானாகவே உள்ளாக்கிக்கொள்ளுமானால் அது வரலாற்றுக் குச் செய்யும் ஒரு துரோகமாகும். இவ்விதமான ஒரு துரோகத்தையே இன்று இந்திய அரசும் ஏனைய முதலாளித்துவ அரசியல் கட்சிகளும் விரும்புகின்றன. இவ்வித துரோகத்திற்கு எல்.டி.டி.ஈ. சம்மதிக்கா விட்டால் அதை முழுமையாக அழித்துவிடுவதே இந்திய அரசினதும், ஜே. ஆரினதும் ஏனைய தமிழ் ஈழ துரோக கும்பல்களினதும் நோக்கமாகும்.

இதை தவிர்த்துக் கொள்வதானால், போர் போர் முனையில் இருந்து பின்வாங்கி, இலங்கைத்தீவு எங்கணும் நகர்புற கொரில்லா நடவடிக்கை உட்பட அனைத்து வகை கொரில்லா போர் முறைகளையும் பிரயோகிப்பதுவே சிறந்த இராணுவ மூலோபாயமாகும். இந்திய இராணுவத்தின் பரிணாமத்தைக் கண்டு அஞ்சவேண்டிய அல்லது தயங்க வேண்டிய அவசியம் இல்லை. அது அளவில் மிக பெரிதாக இருப்பது உண்மைதான். ஆனால் இலங்கை இராணுவத்தையும் விட அதுவே இவ்வித கொரில்லா யுத்தத்தை முகங் கொடுப்பதில் கூடிய அரசியல், இராணுவ நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றது.

''கொரில்லா யுத்தத்திற்கு திரும்புவதென்பது, தமிழ் ஈழ விடுதலை யுத்தம் 70ம் ஆண்டுகளின் பிற்பகுதிகளுள் மீண்டும் பிரவேசிக்க வேண்டும் என்பதேயாகும். யுத்த முறைதான் மீள திரும்புகிறதே தவிர, யுத்தத்தின் அரசியல் உள்ளடக்கமும், யுத்தத்தின் இராணுவ உள்ளடக்கமும், முன்பைவிட உயர்ந்த கட்டத்தை அடைந்துள்ளதுடன், அதன் பூகோள பரப்பளவும் தமிழ் ஈழத்திற்கும் அப்பால் மிகப் பரந்தளவு விஸ்தரிக்கப்படுவதற்கான வாய்ப்புகளையும் பெற்றுள்ளது.

### எல்.டி.டி.ஈ யை பாராட்டுவதா?

நவ- சகாப்தம் ஆசிரியரால்எல்.டி.டி.ஈ யிற்கு எழுதிய கடிதம் இவ்விதழில் பிரசுரமாகின்றது. இந்திய மத்திய அரசின் ஸ்திர நிலையையும், அதன்மேலாதிக்கத்தையும் பாதிக்கும் அனைத்து வகையான இயக்கங்களையும் ஊடுருவல் என பூச்சாண்டி காட்டும் கம்யூனியஸ லேபிள் இட்டுள்ள கம்யூனியஸகருங்காலிகளும், ஏனைய ''ஏகாதிபத்திய எதிர்ப்புவாதிகளும்'', இக் கடிதத்தையிட்டு முகஞ்சுழித்து முணுமுணுப்பார்கள் அல்லது 'சத்திய' ஆவேசம் அடைவார்கள் என்பதை நாம் அறிவோம்.

இன்று இலங்கை உட்பட அனைத்து தெற்காசிய நாடுகளின் மக்களுக்கும் உடனடியான இரு புரட்சிகர அரசியல்மேடைகள் உண்டுஒன்று, தேசிய ஜனநாயகப் புரட்சிக்கான மேடை. மற்றையது மக்கள் ஜனநாயக புரட்சிக்கான மேடை. முதல் வகையானது, ஏகாதிபத்தியத்திற்கும், சோவியத் சோசலிஸக் குடியரசின் தேசகங்கார வாத மேலாதிக்கத்திற்கும், அனைத்திந்திய பூர்ஷ்வாக்களின் பிராந்தியமேலாதிக்கத்திற்கும் அவ்வவ் நாடுகளின் இன மேலாதிக்க RACIAL CHAu ISM வாதத்திற்கும் இராணுவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வாதிகாரத்திற்கும் அனைத்து அரசியல் சக்திகளையும் உள்ளடக்கிய ஒருபொது மேடையாகும் அவ்விதம் உள்ளடங்கியுள்ள அனைவரும் தமக்குள் அரசியல் நட்புறவு கொண்டவர்களே யாகும். இவர்கள் ஒன்றை ஒன்று மறுதலிக்கும் சித்தாந்தத்தை கொண்டவர்களாகவும், பகை முரண்பாடு கொண்ட வர்க்கங்களின் வர்க்க நலன்களை பிரதிபலிப்பவர்களாகவும் இருக்க முடியும். கறாராக இந்த அர்த்தத்தில் மாத்திரமே மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட்களும் மக்கள் ஜனநாயக புரட்சி போராளிகளும் எல்.டி டி.ஈ யுடன்ஒரு நட்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என நாம் கோருகிறோம்.

இரண்டாவது வகையானது, 1வது வகை எதிரிகளை எதிர்ப்பதுடன் சேர்த்து, அதையும் தாண்டிச் சென்று, பொருளாதாரத்தில் அனைத்து வகை தனிச்சொத்து வடிவங்களின் ஆதிக்கத்தையும், அரசியல் அனைத்துவகை ஜனநாயக விரோத ஆட்சி முறைகளையும், அனைத்துவகை இன, மத, சாதி... இத்தியாதி மக்கட்பிரிவுகளுக்கிடையேயுள்ள அசமத்துவ உரிமைகளையும் எதிர்ப்பவர்களைக் கொண்ட ஒரு அரசியல் மேடையாகும். இந்நோக்கு நிலையில் இருந்து பார்க்கும் போது எல்.டி.டி.ஈ. இம் மேடைக்குரிய ஒரு இயக்கமல்ல. இதனுடன் எந்த நட்புறவும் இவ் எல்லைக்குள் கொள்ளமுடியாது.

மக்கள் ஜனநாயக புரட்சியாளர்கள் தமது சொந்த மேடையில் உறுதியாக நிற்பதற்கான வேலைத்திட்டத்தை நிறை வேற்றிவரும் அதே வேளை, இக் கடமையுடன் சேர்த்து தேசிய ஜனநாயக புரட்சி மேடையிலும் தம்மை அப் புரட்சி முற்றுப் பெறும் வரை தொடர்ச்சியாக தம்மை நிலைநிறுத்திக் கொள்வதில் வல்லவர்களாக இருக்க வேண்டும். மக்கள் ஜனநாயக புரட்சியுடன் இனைவு காணாத தேசியஜனநாயக புரட்சியாளர்கள் என்றைக்கும் மக்களின் அரசியல் வகைப்பட்டதும், பொருளாதார வகைப்பட்டதுமான ஜனநாயக கோரிக்கைகளை எதிர்ப்பவர்களாகவும், அடக்குபவர்களாகவுமே இருப்பார்கள். அவர்கள் என்றென்றும் ஒரு சிறுபான்மைகோஷ்டியின்இராணுவ எதேச்சாதிக்காரத்துக்காக உழைப்பவர்களாகவே இருப்பார்கள். அவர்களின் குறிக்கோள் அதுவாகவே இருக்கும். ஏனைய இயக்கங்களை அழிப்பதன் வாயிலாகவே இந்நோக்கங்களை நிறைவேற்ற முடியுமாதலால் அடிக்கடி உள்நாட்டு யுத்தங்களை தூண்டிவிடுவார்கள்.

மக்கள் ஜனநாயக புரட்சியாளர்கள் இவ்விதமான சந்தர்ப்பத்தில் உள்நாட்டு யுத்தத்தை உள் நாட்டு யுத்தத்தால் முறியடித்தல் என்ற கோட்பாட்டை பின்பற்றக் கூடாது. தற்பாது காப்பிற்காக இராணுவ நடவடிக்கை எடுப்பது என்ற மட்டத்துடன் தம்மை நிறுத்திக் கொள்ள வேண்டும். தேச ஐக்கியத்தையே பிரதான முழக்கமாகவும் வேலைத்திட்டமாகவும் கொள்ள வேண்டும். தேச அடக்கு முறையாளர்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எதிரான போராட்டத்தில் பிரதான சக்தியாக தம்மை வளர்த்துக் கொள்வதிலேயே பிரதான கவனம் செலுத்த வேண்டும். இவ்விதம் செயற்படுவதன் மூலம் ஜனநாயக போக்கை நிறைவேற்றிக் காட்டுபவர்களாக மாற வேண்டும். ஏதேச்சாதிகார சக்திகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்த்தும், அவர்களால் தூண்டிவிடப்படும் உள்நாட்டு யுத்தத்தை எதிர்த்தும் பரந்த சக்திமிகு வெகுஜன அலையை உருவாக்க வேண்டும். இதன் மூலம் அவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்பாட்டுக்கு கீழ் கொண்டு வந்து தேசிய ஜனநாயக புரட்சி மேடையின் துஷ்டத்தனமற்ற நண்பனாக ஆக்கிக் கொள்ள வேண்டும். தேசிய ஜனநாயக புரட்சி முடியும் வரை நண்பனாக ஆக்கிக் கொள்வது தொடர்ந்தும் நட்பை பேணிக் கொள்வது என்ற கோணத்தில் இருந்தே இப் பிரச்சனை அணுகப் பட வேண்டும். இது மிகவும் கடினமானதும் நிதானமானதுமான பணிதான், ஆனால் இதை விட குறுக்கு வழி எதுவுமேயில்லை.

உள்நாட்டில் வளர்ந்து வரும் ஜனநாயக விரோத சக்திகளையும், இராணுவ எதேச்சதிகாரிகளையும் எதிர்பதற்காக, அல்லது அவர்களிடம் இருந்து தம்மை பாதுகாப்பதற்காக ஆக்கிரமப்பாளர்களுடனும், பிராந்திய மேலாதிக்கவாதிகளுடனும் தம்மை இனங்காட்டிக் கொள்வது தேசத்துரோகமும், ஜனநாயகத்தின் பேரால் ஜனநாயகத்திற்கே இழைக்கப்படும் துரோகமுமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''எது எவ்விதமானாலும், இந்திய ஆக்கிரமிப்பை எதிர்ப்பது என்பது இன்று தெற்காசியாவின் மூன்று பிரதான ஆதிக்கசக்திகளையும் எதிர்ப்ப தென்பதேயாகும்.'' தெற்காசிய பிராந்தியத்தின் அனைத்து வனகயான ஜனநாயக அத்துமிறல்களையும் எதிர்பதன் மூலமே இப்பிராந்தியம் நடுநிலைமை பிராந்தியமாக மாறமுடியும்.

## உடன்பாட்டையும் இந்தியஅரசையும் எதிர்ப்பவர்கள் அமெரிக்க சகபாடிகளா?

இந்திய சிறீலங்கா உடன்படிக்கையின் சர்வதேச பரிமாணம் பற்றிய ஒரு கட்டுரையும் இவ் இதழில் இடம் பெறுகின்றது. இது இந்திய மார்க்ஸிய லெனினிய தோழமை அமைப் பொன்றின், இவ் உடன்படிக்கை தொடர்பான ஓர் அறிக்கையை விமர்சித்து ப்ரோவாவால் 'இந்திய இலங்கை மார்க்ஸிஸ்டுகளுக் கிடையே யான உறவு மேலும் வளம் பெறட்டும்'' என தலைப்பிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையின் சில பகுதிகளாகும். முழு விமர்சனத்தையும் அனைத்து அணியினருக்கும் பகிரங்கப்படுத்து வது அவசியமற்றதாகையால் அதன் சில பகுதிகளை மாத்திரமே பிரசுரிக்கின்றோம்.

இந்திய முதலாளித்துவத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதில் அமெரிக்க ஏகாதிபத்திய முகாம் பல்வேறு முயற்சிகளையும் மேற் கொண்டு வருகின்றது. இதே முதலாளித்துவத்தை தனது தேசகாரங்க மேலாதிக்க வாதத்திற்கு கீழ்ப்பட்ட தொன்றாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின் றது சோவியத் யூனியன். இம் முரண்பாடுகளை பயன்படுத்தியவண்ணம் தன்னை வளர்த்துக் கொள்ளவும், தெற்காசியாவின் மேலாதிக்க சக்தியாக தன்னை மாற்றிக் கொள்ளவும் முயற் சிக்கின்றது இந்திய முதலாளித்துவம். இந் நிகழ்ச்சிப் போக்கின் போது சில நேரங்களில் இவை மூன்றுமே ஒன்று சேர்கின்றன, சில நேரங்களில் இந்தியா தனித்து நிற்கின்றது, வேறு சில நேரங்களில் இந்தியா சோவியத் கூட்டும், இன்னோர் நேரங்களில் இந்திய அமெரிக்க கூட்டும் ஏற்படுகின்றது.

இந்திய- சிறீலங்கா உடன்படிக்கை இவை மூன்றுமே ஒன்று சேர்ந்த ஒருநிகழ்ச்சியாகும். இந்திய ஆக்கிரமிப்பு மூவருக்குமே நன்மை பயக்கும் விடயமாகும் இதில் யார் அதிக மூலோபாயரீதியான நன்மை பெறுவார்கள் யார் அதிக தீமை பெறுவார்கள் என்பதை பொறுத்து தான் பார்க்கவேண்டும். தற்போது அமெரிக்க ஏகாதிபத்திய முகாமே அதிக பொருளாதார நன்மை பெற்றுள்ளது. இவ் ஆக்கிரமப்பை ஆரம்பிக்கவும் தொடரவும் அதுவே அதிககவன மும் செலுத்துகின்றது. இந்திய முதலாளித் துவமே மிக அதிகளவு அரசியல் இராணுவ நஷ்டமடைந்துள்ளது. இந்திய இராணுவத்தின் தோல்வியின் விளைவை ஈடுசெய்ய அது தனது இராணுவபலத்தை மேலும் அதிகரிக்கவும் இராணுவ சாகசங்கள் புரிந்து காட்டவும் முற்பட வேண்டிய நிர்பந்த நிலை தோன்றியுள்ளது. இதை நிறைவேற்ற இந்திய முதலாளித்துவம் எந்த முகாமை நாடப்போகின்றது, என்ன வழியில் நாடப்போகின்றது என்பதை வைத்து இவ் உடன்படிக்கையின் பலனையார்கூடுதாலக நுகரப்போகிறார்கள் என்பதை அறிய முடியும்.

''எது எவ்விதமானாலும், இந்திய ஆக்கிர மிப்பை எதிர்ப்பது என்பது இன்று தெற்காசி யாவின் மூன்று பிரதான ஆதிக்கசக்திகளையும் எதிர்ப்பதென்பதேயாகும்" தெற்காசிய பிராந்தி யத்தின் அனைத்துவகையானஜனநாயக அத்து மீறல்களையும் எதிர்பதன் மூலமே இப்பிராந்தி யம் நடுநிலைமை பிராந்தியமாக மாறமுடியும்

20.10-87

ஏ. ஜி காந்தன்
ஆசிரியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலைப்புலி தலைவர்

# திரு. வே.பிரபாகரனுக்கு பகிரங்க கடிதம்

## தவறுகள் திருத்தப்பட்டு, பயணங்கள் தொடரட்டும்!

நண்ப:

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டமானது ஆயுதப் போராட்டம் என்ற கட்டத்துள் பிரவேசித்த நாளில் இருந்து இன்றுவரை அதன் ஏற்ற இறக்கங்களையும், திருப்பு முனைகளையும் தீர்மானிக்கும் பிரதான இராணுவ சக்தியாக இருந்து வருவதற்காக த. ஈ. வி. பு. க்கு '~~ப்ளோட்டா~~வின்' நல்வாழ்த்துக்களையும் ~~வீர~~வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய - சிறிலங்கா உடன்படிக்கையின் பின் த. ஈ. வி போராட்டம் மூலோபாய ரீதியான மாற்றத்திற்குள்ளாகியுள்ளது. சிங்கள பேரினவாத அரசை எதிர் கொண்டிருந்த இப் போராட்டமானது, தற்போது தனது உடனடி, நேரடி, பிரதான எதிரியாக இந்திய - சிறிலங்கா இராணுவ கூட்டை எதிர் கொள்கின்றது.

இந்திய நாட்டில் பல தேசிய இன, மத, ஜாதிய, இனவாத அடக்குமுறைகளை பிரயோகிப்பதில் கைதேர்ந்த ஹிந்தி - பிராமண மேலாதிக்க இந்திய அரசானது இன்று தெற்காசியப் பிராந்தியத்தின், இந்திய எல்லைகளுக்கு அப்பால் உள்ள ஏனைய தேசிய இயக்கங்களையும் அடக்கும் மட்டத்திற்கு வளர்ச்சியடைந்துள்ளது. இந்திய - ஸ்ரீலங்கா இராணுவக்கூட்டு இதன் முதலாவது வெளிப்பாடாகும்.

இக்கூட்டை அம்பலப்படுத்துவதிலும் எதிர்த்துப் போராடுவதிலும் த. ஈ. வி. பு. வகித்துவரும் பங்களிப்பிற்கு '~~ப்ளோட்டா~~' தனது ~~வீர~~வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்வுடன்படிக்கையால் அணைக்கப்பட்டு விடுமோ என எதிர்பார்க்கப்பட்ட த. ஈ. வி. போராட்ட தீயை அணையவிடாது பாதுகாத்து அதை மேலும் கொழுந்து விட்டு எரியச் செய்கின்ற தீர்மானகரமான சக்தி இன்று நீங்களே ஆகும் என்று கூறுவது மிகையானதொன்றல்ல.

ஜெ. ஆர்—ன் இராணுவ சர்வாதிகத்திற்கும், தேசத் துரோகத்திற்கும் எதிரான சிறிலங்கர்களின் போராட்டத்திற்கு உங்களின் போர்க்குணம் ஒரு உந்துசக்தியும் துணை அங்கமுமாகும். அதுமாத்திரமல்ல, தமிழ்நாட்டு மக்களின் மனதில் இந்திய மத்திய அரசின் இனவாத அடக்குமுறைக்கெதிராக கனன்று வரும் தீயை பற்றி எரிப்பதில் உங்களின் இப் போர்க்குணம் ஓர் ஊக்கியாக செயல்படுகின்றது. மேலும் கூறுவதானால் இப்பிராந்தியத்தில் இந்திய மத்திய அரசின் ராணுவ பலத்தைப் பற்றி நிலவிவருகின்ற மாயையை உடைத்தெறிவதில் உங்களின் பங்களிப்பும் பிரதானமாகியுள்ளது உங்கள் போராட்டமானது தோற்கடிக்கப்படாததொன்றாக மாறுமானால் அதன் அரசியல் விளைவை மிக விரைவில் இந்தியாவின் வடமாநிலங்களில் காணக்கூடியதாக இருக்கும்.

வரலாற்று முக்கியத்துவம் மிக்கதும் மூலோபாய முக்கியத்துவம் மிக்கதுமான ஒரு கடினப்பணியை துணிந்து தங்கள் தோள்களில் சுமந்ததற்காக உங்களுக்கு இப்பிராந்திய புரட்சிகர அமைப்புகளின் வீரவணக்கங்கள் என்றென்றும் உண்டு.

இப்பணியின் போது த. ஈ. வி. பு. தலைவரான நீங்கள் உட்பட பலர் மரணமடையலாம், சிறைப்பிடிக்கப்படலாம். உங்கள் இயக்கம் மிகப் பாரதூரமான பின்னடைவுகளுக்கு முகம் கொடுக்கவும் நேரிடலாம். இவ்விதம் நடந்தாலும் கூட உங்கள் தியாகங்கள் என்றும் வீண் போகமாட்டாது. போராட்டத்தில் உறுதியாக நிற்பதுபோல் உங்கள் தவறுகளை திருத்திக்

www.tamilarangam.net



கொள்வதிலும் கவனம் செலுத்மவீர்களானால் உங்கள் இயக்கம் மீண்டும் தழைத்து வளருவது நிச்சயமானது.

தெற்காசிய வல்லரசை எதிர்கொள்ள வேண்டி உலக வல்லரசுகளை நாடி ஓடல் என்பது அனைத்து மக்களுக்கும் செய்யும் துரோகமாகும். எமது பிராந்தியம் தேசிய விடுதலை இயக்கங்களின் செயற்படுகளமாக மாறி வருகின்றது. இவைதம்மை ஓர்நிரைபடுத்திக் கொள்வதன் மூலமே தமது சொந்தப் பிராந்தியத்தில் பிரதான, உடனடி எதிரியை தோற்கடிக்க முடியும். ஆகவே இப்பிராந்திய நண்பர்கள் உடனான ஓர்புரிந்துணர்வையாவது ஏற்படுத்திக் கொள்வது மிக அவசியமானதாகும். இதுவே நீடித்த யுத்தத்திற்கு அவசியமான மூலோபாயமாகும்.

உங்களின் தற்போதைய இப்போராட்டம் தெற்காசியாவின் அமைதிக்கு பங்கம் விளைவிப்பதாகவும், வல்லரசுகளின் ஊடுருவலுக்கு வழி வகுப்பதாகவும் சிலர் உங்களை குற்றம் சாட்டுகிறார்கள். தெற்காசியாவின் அனைத்து தேசிய இனங்களும் தமக்கிடையேயான சமத்துவ உறவின் அடிப்படையில் ஏற்படுத்திக் கொள்ளும் உறவே உண்மையான அமைதியாகும். குறிப்பிட்ட ஒரு பிரிவு, ஏனையோர்களை தமது காலடியில் மிதித்து துவைத்து உருவாக்கும் ஒற்றுமையும் அமைதியும் ஒடிந்துபோகட்டும். இவ்வகைப்பட்ட அடிமைத்தனத்தை உடைத்தெறிவதற்கான போராட்டங்கள் நிரந்தர அமைதியை நிலைநாட்ட அவசியமான புரட்சிகரமான அமைதியின்மைகளே ஆகும். யுத்தத்தை யுத்தத்தால் முறியடிப்பது போன்றதே இதுவும்.

இப்பாரிய கடமையை பொறுப்பெடுத்தற்காக தங்களை வாழ்த்தும் அதே வேளையில் உங்கள் இயக்கத்தின்மூலோபாய முக்கியத்துவம் மிக்க தவறுகளையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளோம்.

(1) இன்று நீங்கள்தனிமைப் பட்டுள்ளீர்கள் இதற்கான காரணத்தை இந்திய உளவுப்படை ஒன்றின்மேல் சுமத்தியுள்ளீர்கள். இது பிரதான காரணமல்ல. உங்கள் மேலாதிக்க வாத சொந்த அபிலாசைகளையும் அதன் விளைவுகளையும் இவ்வுளவுப்படையினர் அனைத்து விடுதலை இயக்கங்களையும் அழிப்பதற்கு சாதகமாக பயன்படுத்தியுள்ளார்கள் என்பதே உண்மையாகும்.

த. ஈ. வி. அமைப்புகளில் அன்னிய உளவு நிறுவனங்களின் ஊடுருவல் இருப்பதும் சில உயர்மட்ட நபர்கள் அவர்களின் முகவர்களாக இருப்பதும் மறுக்க முடியாத உண்மை. இவ் வூடுருவலை எதிர்ப்பதை சாக்குபோக்காகக் கொண்டு ஒரு இயக்கத்தையே முழுமையாக அழிக்க முற்படுவது மிகத்தவறானது. உங்களின் இவ்வித நடவடிக்கையும், தமிழ் ஈழம் அமைந்தபின் உங்கள் இயக்கம் மாத்திரம்தான் ஆட்சியில் இருக்கும், ஏனையவை அழிக்கப்படும் என்ற உங்கள் அபிலாசையும் த. ஈ. வி. போராட்டத்திற்கு பல இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது மாத்திரமல்ல உங்களின் இருத்தலையும் கேள்விக்கு இடமாக்கியுள்ளது. நீங்கள் இழைத்த தவறுக்கான நிவர்த்தியை நீங்களே தேடிக்கொள்ள வேண்டும். எந்த ஒரு விடுதலை இயக்கத்தையும் அல்லது அரசியல் கட்சியையும் ஆயுத பிரயோகிப்பின் மூலம் மாத்திரம் அழிக்க முற்படுவது தவறானது. ஒற்றர்கள் மாத்திரம் இவ்விதம் நடத்தப்படவேண்டும். அரசியல் முரண்பாடுகளை தீர்ப்பதற்கு அரசியல் போராட்டமே பிரதானமானது. ஏனைய இயக்கங்களை மதித்து சிநேக உறவு பூணுவதற்கான காலம் இன்னமும் கடந்துவிடவில்லை.

(2) மக்கள் ஸ்தாபனரீதியாக அணித்திரள்வதை எதிர்த்துவந்தீர்கள். நிலவுடமையாளர்களுக்கும் ஏனைய உயர்வர்க்கங்களுக்கும் எதிரான போராட்டங்களின் போது மேல்தட்டு வர்க்கங்களுடனேயே இணைவு கண்டீர்கள். இதன் மூலம் கீழ்தட்டு மக்களிடமிருந்து அன்னியப்பட்டீர்கள். உங்களை ஆதரித்த அதேமேல்தட்டு வர்க்கங்கள் இன்று உங்களை கைவிட்டு சமரசவாதிகளையும், தேசத் துரோகிகளையும் ஆதரிப்பதை புரிந்திருப்பீர்கள் என்று எண்ணுகிறோம். அதே வேளை மன்னிக்கும் பெருந்தன்மையும் போராளிகளை ஆதரிக்கும் மனப்பான்மையும் கொண்ட கீழ்தட்டு மக்கள் உங்களின் கடந்தகால தவறுகளை பொருட்படுத்தாமல் தற்போது உங்களுக்கு ஆதரவு வழங்குவதை புரிந்திருப்பீர்கள் என எண்ணுகிறோம். இந்த நடைமுறை அனுபவத்தை புறக்கணிக்காது இனிவரும் காலத்திலாவது தமிழ் ஈழ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாகம் மட்டும் இருந்தால் போதாது உழைக்கும் மக்களின் நலனிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை அம்மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

(3) சிங்கள குடியேற்றத்திட்டக் குடியிருப்பாளர்களுக்குக்கெதிரானசமீபத்திய (அக்டோபர் முற்பகுதி) ராணுவத் தாக்குதல் கவனத்துக்குரிய அடுத்த விடயமாகும்.

இந்திய சிறிலங்கா உடன்படிக்கைக்கு விரோதமாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் சிங்களகுடியேற்றங்களைஅமைப்பதில் ஜெ. ஆர். அரசு செயல்பட்ட தற்கு எதிரான ஒரு அரசியல் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற உங்கள் முயற்சி பாராட்டக் கூடியது. சிறிலங்கா அரசோ இவ்வித குடியேற்றங்கள் மூலம் கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்திலிருந்து பிரிக்க முற்பட்டது. மறுபுறத்தில் இச் சிங்கள மக்களுக்கெதிரான விடுதலை இயக்கங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் அதை பூதாகாரப்படுத்தி விடுதலை அரசியல் அந்தஸ்துக்கு களங்கம் விளைவிப்பதும், விடுதலை இயக்கங்களை அடக்குவதுமே ஜெ. ஆர். அரசினது திட்டமாகும். சிங்கள மக்களுடனான இணைவு தொடர்புபட்டு த. ஈ. வி. புலிகளுக்கு இருந்த தவறான கண்ணோட்டத்தின் விளைவால் நீங்கள் ஜெ. ஆர். ஐ. பி. கே. எப். சதிக்குள் வீழ்ந்துவிட்டது துக்ககரமானதே. இக்குடியேற்றங்களில் இருந்த சிங்கள இனத்தவர்களின் கொலைக்கான பிரதான பொறுப்பு ஜெ.ஆர். அரசும். அதை அனுமதித்து வந்த ஐ. பி.கே. எப்-ம் தான்.

மக்களின்எந்தப்பகுதியையாவதுபிற்போக்குவாதிகள் பகடைக்காய்களாக பயன்படுத்துவார்களானால் அதுவும் குறிப்பாக அரசியல்-ராணுவ நடவடிக்கைக்கான் பகடைக்காய்களாக பயன்படுத்துவார்களானால், அம்மக்களுக்கு எதிராகவும் அரசியல்- இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டிய இக்கட்டான நிலைமை போராளிகளுக்கு ஏற்படவே செய்யும். ஆகவே குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை அச்சம்பவமாக மாத்திரம் எடுத்துப் பார்க்காமல், குறிப்பிட்ட அச்சம்பவம் எந்த சமூக நிகழ்ச்சி போக்கின் அங்கமாக உள்ளது, அது அந்நிகழ்ச்சிப் போக்கில் என்ன விதமான தாக்கத்தை உருவாக்குகின்றது என்பதை வைத்துக்கொண்டே அச்சம்பவம் மதிப்பிடப்படவேண்டும்.

இவ்விதம் நோக்கும்போது நாம் இச்சம்பவத்தை ஒரு இனவாத நடவடிக்கையாக கருதவில்லை. 85-ம் ஆண்டு ஜூலை கலவரத்துடனோ 86ம் ஆண்டு அனுராதபுர இனப்பழிவாங்கல் படுகொலை சம்பவத்துடனோ இதை ஒப்பிடவில்லை. இது தவறான ஒரு அரசியல் இராணுவ நடவடிக்கை என்ற கோணத்தில் இருந்தே இதை அணுகுகிறோம்.

இனியும் தொடர்ந்து ஏற்படவுள்ள இவ்விதமான நெருக்கடிகளின் போது எந்தவிதமான அரசியல் மூலோபாயத்திலிருந்து இவை அணுகப்படவேண்டும் என்பதே இங்கு கவனத்திற்குரியதாகும்.

த. ஈ. வி. போராட்டமும், ஜெ. ஆரின் இராணுவ சர்வாதிகாரத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான சிறிலங்கர்களின் போராட்டங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவை. ஒன்றையொன்று சார்ந்துள்ளவை. ஒன்றின் வளர்ச்சி மற்றயதன் வளர்ச்சியில் பரஸ்பரம் தங்கியுள்ளது. இந்திய - சிறிலங்கா உடன்படிக்கையின் பின் இந் நிலைமை மேலும் வளர்ச்சி பெற்றுள்ளது. த. ஈ.வி.போராளிகளை உள்ளடக்கியதுமான முழு இலங்கை தழுவிய தேசபக்த ஐக்கிய முன்னணி ஒன்று அமைவதற்காக சாத்தியப்பாடுகளும்அதற்கான அவசியமும் ஏற்பட்டுள்ளது.

இம்மூலோபாய நிலைப்பாட்டில் இருந்த வண்ணமே த.ஈ.வி.போராளிகள் மேற்சொன்ன நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டும்.

தமிழ் ஈழத்தைப் பெற்றெடுப்பதில் உறுதியாக நிற்பது போல், தங்கள் தவறுகளை திருத்திக் கொள்வதிலும் உறுதியாக நிற்பீர்களானால் எதிரியை முகங்கொடுக்கும் தங்கள் ஆற்றல் மேலும் வளர்ச்சிபெறும்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தலைவர் அவர்களே!

அனைத்துப் போராளிகளையும், தோழர்களே என விளித்து அனைவரையும் புலிகளாக மாறும்படி கோரி இருந்தீர்கள். பொது இலட்சியத்திற்கான போராட்டத்தில் இணைந்துள்ளவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் எல்லோரும் தோழர்கள்என்ற அர்த்தத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களும், ஏனைய உழைக்கும் மக்களின் ஜனநாயகத்துக்கான போராளிகளும் உங்கள் தோழர்கள்தான். அதேவேளை மார்க்சீய மரபின்படி தனிச்சொத்துடைமைக்கு எதிரான போராட்டத்தின் ஊடாக பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிலை நிறுத்த போராடுபவர்களே தோழர்களாகும். இந்த அர்த்தத்தில் முன்சொன்னவர்களின் தோழர்கள் அல்லநீங்கள், ஆனால்நண்பர்களே. உங்களுக்கும் முன்சொன்னவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு ஆழ்ந்த தத்துவார்த்த பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டது.

1986-87 ஆம் ஆண்டுகளில் பலரை அழித்தொழிப்பதிலும் செயற்படாமல் செய்வதிலும் கூட நீங்கள் நிறையவே பங்காற்றி உள்ளீர்கள். ஆனாலும் அவர்கள் அரசியலில் காழ்புணர்ச்சியோ தனிநபர் அல்லது கோஷ்டிவாத அரசியல் பழிவாங்கும் மனோபவமும் அற்றவர்கள். தேசிய போராளிகளின். பலத்தையும், பலகீனத்தையும் நல்அம்சத்தையும் தீய அம்சத்தையும் புரிந்து கொண்டவர்கள். சிறிலங்கா அரசுக்கும் இந்தியமேலாதிக்கத்திற்கும் எதிரான போராட்டத்தின் மூலம் தேசியவிடுதலைக்கு இன்று நீங்கள் வழங்கும் மதிப்புமிக்க பங்களிப்புகளுக்கு தமிழ் ஈழ சுயநிர்ணய உரிமைக்காக போராடும் பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களினதும், ஏனைய இடதுசாரிகளனது ஆதரவும் ஒத்துழைப்பும் தமிழ் ஈழ தணியாத தாகமுள்ள எங்களுக்கு என்றும் உண்டு. இலங்கையில் மாத்திரமல்ல இந்தியாவிலும் இந்நிலைமையை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

வீரவணக்கங்கள் கூறி, நட்புக்கரம் நீட்டி விடை பெறுகிறோம்.

தங்களின்,
ஏ. ஜி. காந்தன்.
(ஆசிரியர், நவ சகாப்தம்)
நாள் : 15—10—1987.

# "இந்திய – இலங்கை மார்க்சிஸ்டுகளுக்கிடையேயான உறவு மேலும் வளம் பெறட்டும்"

### என்ற பிரசுரத்தின் சில பகுதிகள்

உடன்படிக்கையை எய்துவதற்கு இலங்கை இந்திய அரசுகள் முன் வந்ததற்கான காரணங்கள் பற்றிய முடிவுகள் மீளஆராயப்பட வேண்டியவை தெற்காசிய பிராந்திய நிலைமையைப் பற்றிய ஒரு பொதுக்கருத்தும், இதன் அடிப்படையில் பொது அணுகுமுறையும் இந்திய இலங்கை மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்களுக்கு அவசியமானபடியாலேயே இது தொடர்பாக இக்குறைபாடுள்ள கருத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

"ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் விளைவாக அரசியல், பொருளாதார. மற்றும் ராணுவ நெருக்கடியில் மூழ்கிவிட்ட இலங்கை அரசை அழிவிலிருந்து காப்பாற்ற அமெரிக்க ஏகாதிபத்தியம் விரும்பியது" எனவும் இதுவே இலங்கை அரசு உடன்படிக்கைக்கு சம்மதித்தற்கான காரணம் என்றும் அறிக்கை கூறுகிறது. இக்கணிப்பீடு தவறானது. இலங்கை அரசை ராணுவ மயப்படுத்துவதே அமெரிக்க அரசின் நோக்கமாக இருந்து வந்துள்ளது. இதற்காக இலங்கையின் தேசிய இனச் சிக்கலை மேலும் கூர்மைப்படுத்தியும் சிக்கலான தாக்கியும் இராணுவத் தீர்வு மிக்கதானதாக்கியும் வந்துள்ளது இருபகுதிக்கும் ஆயுதங்கள் சென்றடைவதில் கவனம் செலுத்தியும் வந்துள்ளது. அமெரிக்கா, தான் நேரடியாக தலையிடாமல் தனியார் வர்க்கத்தவர்கள் ஊடாகவும் இந்திய அதிகாரத்துவத்தில் உள்ள அமெரிக்கசார் பகுதியினர் ஊடாகவும் விடுதலை இயக்கத்தின் சில பகுதியினருக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதை ஊக்கப்படுத்தி வந்தது. சிறிலங்கா அரசுக்கு வெளிப்படையாகவே உதவியது. இலங்கையின் தேசிய வருமானம் யுத்தத்தால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் இதை விரும்பியது. ஏகாதிபத்தியத்தின் பொருளாதார வளைப்பின் னலில் இலங்கையை தெற்காசிய முக்கிய முடிச் சாக அதாவது சிங்கப்பூராகவோ, தென் கொரியாவாகவோ மாற்றுவதற்கு எடுத்த முயற் சிகள் தோல்வியே கண்டன. அதனாலும் வேறு ராணுவ மேலாதிக்க காரணத்தினாலும் ராணுவ வளைப்பின்னலின் முடிச்சுக்களில் ஒன்றாக மாற்றுவதில் அமெரிக்கா தனது கவனத்தை திருப்பியது. அதாவது தெற்காசிய வின் மற்றொரு பாக்கிஸ்தானாக்க முயற்சித்தது அதனால் இலங்கைப் பொருளாதாரமும் ராணுவ மயப்படுத்தப்பட்டது. அதற்காக நிதி மூலதனத்தில் சார்ந்து நிற்கும் ராணுவ அதிகாரத்துவ வர்க்கம் ஒன்றை முன் கொண்டு வருதலையே முதன்மைப் படுத்தியது. இலங் கையின் ஆளும் வர்க்கத்தின் ஆளுமைமிக்க பகுதியினரும் மாற்றுவழி எதுவும் அற்ற நிலை யில் அதையே விரும்பினார்கள். 1976 -ல் இருந்து அந்நிய மூலதனத்துடன் இணைந்து தொழில் துறை மூலதனத்தையும் வர்த்தக மூல தனத்தையும் வளர்க்க எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டதே இதற்கான காரணமாகும், மின்னமும் கூட பெருந்தோட்டப் பயிர்செய்கை யால் கிடைக்கும். அந்நிய செலாவணியே முதலாவதாகவும் அந்நிய நாடுகளில் தொழில் புரிவோர்களால் கிடைக்கும் செலாவணி இரண்டாவதாகவும் தைத்த உடை ஏற்றுமதியால் கிடைக்கும் செலவாணி மூன்றாவ தாகவும் உல்லாசப் பயனிகளால் கிடைக்கும் செலவானி நான்காவதாகவும் உள்ளது இதை விளக்குகின்றது. பெருந்தோட்டப்பயிர் செய்கை (தேயிலை ரப்பர்) உற்பத்திப் பொருட்களின் விலை உலக சந்தையில் ஸ்திரமற்றவை. அதே போல தைத்தஉடைகளின் விலையும் ஸ்திரமற்ற வை. எண்ணை உற்பத்திநாடுகளின் சமீபத்திய (80—ம் ஆண்டின் பின்னர்) பொருளாதார நெருக்கடியின் காரணத்தால் இந்நாடுகளில் தொழில் புரிவோரால் கிடைத்து வந்த அந்நிய செலாவணியிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. அதே நேரத்தில் இராணுவ செலவீனம் அதிகரித்தது.

1982-ல் மொத்தசெலவில் அது 3.2./.; 1886 13. 6 இந் நிலமைகளின் காரணத்தால்அந்நியக் கடன்களில்தங்கியுள்ள ஒரு இராணுவ பொருளா தாரத்தை நோக்கியே இலங்கையின் ஆளும் வர்க்கமும் நகர்ந்தது. தொடர்ந்தும் நகரநிர்ப் பந்திக்கப்பட்டுள்ளது. ஆகவே அமெரிக்காவும் சிறிலங்கா ஆளும் வர்க்கமும் இராணுவ நெருக் கடிநிலை நீடிப்பதையே விரும்பின. இந்த நெருக்கடியை பாதுகாத்த வண்ணம் வெற்றியும் பெறாது தோல்வியும் அடையாத ஒரு யுத்தத்தை இலங்கை அரசாங்கத்தால் இன்னமும் சிலகாலத் திற்கு கொண்டு சென்றிருக்க முடியும். ஆனால் இதைதிடீர் என நிறுத்திஇந்தியாவின் இராணுவ உதவியை நாடியது ஏன்? இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டும். இலங்கையின் யுத்த நெருக்கடி தற்போது தவிர்க்கப்பட்டுள்ளது உண்மை. ஆனால் இலங்கையை இராணுவ மயப்படுத்தல் என்ற கொள்கையில் இருந்து சிறிலங்கா அரசு தன்னை விலக்கி கொள்ள வில்லை. முன்பு அமெரிக்க முகாமுடன் சார்ந்து நின்று இராணுவமயமாக்குவதில் ஈடுபட்டு வந்தது. தற்போது இந்தியாவுடன் சார்ந்து நின்று அதைத் தொடர்கின்றது. முன்பைவிட இலங்கை தற்போது தான் மேலும் அதிகமாக இராணுவமயப்படுத்தப்பட்டுவருகின்றது.

அதுவித சமூக சீர்திருத்தமோ முதலாளித் துவ வர்க்கங்களிடையேயான அடிப்படை அதி கார மாற்றமோ எதுவும் நடைபெறாமலேயே முகாம் மாற்றிக் கொள்வது என்பது ஒன்றும் புதியதல்ல. ஆனால் எத்தியோப்பியா, எகிப்து, சூடான், சிரியா, வரிசையில் சிறிலங்கா அரசும் சேர்ந்துள்ளது போல் தோன்றினாலும் அது உண்மையல்ல. நடந்தது என்ன? நடு நிலைமை யாளன் என்ற போர்வையில் இலங்கை அரசி யலில் தலையிடுவதன் மூலம் இலங்கை முழு வதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர இதுவரை எடுத்த வகையிலான முயற்சிகள் இனியும் பலனளிக்காது என்ற நிலையை இந்திய அரசு 1987 ஏப்ரல் மாதத்துடன் புரிந்து கொண்டது. விடுதலை இயக்கங்களையும் அதனால் கட்டுப்படுத்த இயலவில்லை. சிறிலங்கா அரசையும் கூட அதனால் கட்டுப் படுத்த இயலவில்லை. 1983-ல் இருந்து 1985 முற்பகுதிவரை ஜி. பார்த்தசாரதியால் பின்பற்ற பட்டுவந்த யூ.என்.பி.எதிர்ப்புமார்க்கம் தோல்வி கண்டது இதன் பின் 198‌5-ன் பிற்பகுதி வரை யான பண்டாரியின் யூ.கே.பி. ஆதரவு மார்க்கம் கூட தோல்வி கண்டது. இதன் காரணத்தால் இந்திய அரசானது சிறிலங்கா அரசையும் விடுதலை அமைப்புக்களையும் நேரடியாக பல வந்தப்படுத்தி இலங்கையை தனது இந்திய இரா ணுவ மண்டலத்துள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியது. இதன் விளைவே 1986 நவம்பரில் விடுதலை இயக்கங்களின் ஆயுதங்களை இந்தியா வில் பறித்ததும் 1987ஜூன்மாதம் இலங்கையின் சுயாதிபத்தியத்தை மீறி பலவந்தமாக இலங்கை யின் ஆகாய பிராந்தியத்துள் சென்று உணவு பொருட்களை விநியோகித்ததுமாகும். இவை 1வது பரிசோதனையும் எச்சரிக்கைகளுமாகும்.

இந்தியாவின் இந்நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்காவும்அதன் இராணுவ நேசநாடுகளும் நடந்து கொண்ட முறை சிறிலங்கா அரசிற்கு அதிர்ச்சியையும்ஏமாற்றத்தையும் விளைவித்தது இது பிரச்சனையின் ஒரு புறம்.

மறுபுறத்தில் இந்தியாவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையேயான அரசியல் உறவு பலமடைந்து வருவது உண்மை. ஆனால் பொருளாதார, வர்த்தக உறவும் தொழில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நுட்பபரிமாற்ற உறவுகளும் அமெரிக்காவுடனும் ஜப்பானுடனும், ஐரோப்பா நாடுகளுடனும் ஒப்பிடும் போது மிகப் பின் தங்கியே உள்ளன நிதி மூலதனத்தைப் பெறுவதற்கும் தொழில் துறைப் பொருட்களுக்கான சந்தைக்கும் கூட அமெரிக்க முகாமையேஇந்திய முதலாளித்துவம் சார்ந்துள்ளது. நவீனமயப்படுத்தல், துரிதப் படுத்துதல் என்பது அமெரிக்க முகாமைமேலும் அதிகமாக சாரவேண்டியது என்பதேயாகும். சோவியத் யூனியனுடனான இந்திய அரசின் உறவு இந்திய அரசுக்கு அரசியல் இலாபம் விளைவிப்பதை பிரதானமாக கொண்டதாகவே யுள்ளது. சோவியத் யூனியனுக்கும் கூட பொருளாதாரஆதாயம் இரண்டாம் பட்சமாகவே உள்ளது. இவ்வுறவுசோவியத்இராணுவநிலையே பிரதானமானதாக கொண்டதாகவேவுள்ளது. பொருளாதார பலாபலன்களை பெற்றுக் கொள்ளும் தகுதி குறைவாகவேயுள்ளது. ஐரோப்பிய நாடுகளுடன் பொருளாதார தொழில் நுட்பத் துறையில் போட்டியிடும் தலைமையில் அது பின் தங்கி நிற்பதே அதற்கான காரணமாகும்

அடுத்தகாரணிக்குச் செல்வோம் பசுபிக்மகா சமுத்திரத்தில் அமெரிக்க இராணுவ வலிமையே பலமிக்கதாக விளங்குகிறது. பசுபிக் மகா சமுத்திரத்தையும் அதன் மேற்குகரையோர நாடுகளையும் இந்துமகா சமுத்திரத்தையும் பிரிக்கும் பெரும் தரைப்பகுதி இந்தியஉபகண்டமே ஆகும் ஆகவே இந்திய உபகண்டம் அமெரிக்கராணுவ வலயத்துள் செல்லா வண்ணம் தடுப்பதே சோவியத்தின்ராணுவ மூலோபாயமாகும், இதற்காகவே அது இந்தியஅரசுடன் இராணுவ கூட்டு ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளது. இந்திய ஆளும்வர்க்கம் இந்தியஉள்நாட்டு விவகாரத்தில் எவ்வளவு தான்பிற்போக்கானதாகவும்இராணுவ அதிகாரத்துவ மிக்கதாகவும் பேரினவாத அணியாகவும் இருந்த போதிலும்அவ்வர்க்கம் இந்திய உபகண்டத்தை அமெரிக்கஇராணுவ வலயத்தில் கொண்டு செல்லாமல் இருக்கும் வரையும் அனைத்து வழிகளிலும் அவ்வர்க்கத்தை ஆதரிப்பது என்பதே சோவியத் யூனியன் வெளிநாட்டுக் கொள்கையாகும். அதாவது இந்திய முதலாளித்துவத்துடனான உறவில் ஒரு வலதுசந்தர்ப்பவாதமார்க்கம் கடைபிடிக்கப் படுகின்றது.

ஆனால் சோவியத்யூனியனின் சொந்த வரையறைகளின் காரணத்தால் இந்திய முதலாளித்துவம் விரும்பும்பாணியிலான வளர்ச்சிக்கு அவசியமான பங்களிப்புகளை அதனால் வழங்கமுடியாது.

ஆகவே இந்திய முதலாளித்துவ பொருளாதாரம் அமெரிக்க முகாமையே சார்ந்துள்ளது. இந்திய மண்ணில் பல்தேசியக் கம்பனிகளினதும் அந்நிய வங்கிகளினதும் பொருளாதார, அரசியல் ஆதிக்க அதிகரிப்புக்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

அடுத்த வல்லரசான அமெரிக்காவைப் பொறுத்தவரை தனது இராணுவ மேலாதிக்கத்திற்காக இந்தியாவையும் தனது இராணுவ வலயத்துள் கொண்டு வரவிரும்பினாலும் இது இயலாத காரியம் என்பதை புரிந்து கொண்டுள்ளது. ஆகவே அது தெற்காசியாவில் இருவகையான தந்திரங்களை கையாளுகிறது. இந்திய அரசினது இராணுவ, அரசியல் ஸ்திர தன்மைகளை சீர்குலைக்க இந்திய நாட்டின் உள்முரண்பாடுகளைப் பயன்படுத்துவதையும் இந்திய எல்லை ஓரங்களில் உள்ள நாடுகளைப் பயன்படுத்துவதையும் முதல் வழிமுறையாக கொண்டுள்ளது.

இதன்மூலம் இந்திய அரசின் மேல் தனது அரசியல் மேலாண்மையை செலுத்த வழிவகுத்துக் கொள்கிறது. அத்துடன் இந்திய மக்களினதும் அண்டைநாட்டு மக்களினதும் நியாயமான போராட்டங்களை தவறாக திசை திருப்பி தனது வல்லரசு மேலாதிக்கத்திற்கு சாதகமாகப் பயன்படுத்துகிறது. (உம்) இந்தோனேசியா வூடாக பங்களாதேச இராணுவத்தை தன் மயப்படுத்த முற்படுகிறது. பங்களாதேஷ் இராணுவ சர்வாதிகாரியை ஊக்குவிக்கிறது. இதேபோல் பாக்கிஸ்தானை ராணுவ மயப்படுத்துதல். இலங்கையில் இனப்பிரச்சனையை தூபமிட்டு சிறிலங்கா ராணுவத்தை தன் மயப்படுத்துதல், இந்திய மண்ணில் இந்துமத வெறி, ஹிந்தி இன மேலாதிக்க அரசுக்கு எதிரான ஏனைய மதப்பிரிவினரின் நியாயமான போராட்டங்களை தவறான வழிகளில் திருப்பிவிடல், அதேநேரம் இந்திய ஆளும் கட்சியினுள்ளும் மதவெறியர்களையும் இனவெறியர்களையும் வளர்த்தல்.

இரண்டாவது வழிமுறை;

இந்திய ஆளும் வர்க்கத்துடன் நேரடியாக அரசியல் ரீதியிலோ ராணுவ ரீதியிலோ, மோதிக் கொள்வதை தவிர்த்தல் இவர்களுடன் நேச உறவை முடிந்தளவு வளர்த்துக்கொள்ளுதல் பொருளாதார ரீதியில் நிதி மூலதனத்தினதும் பல்தேசியக்கம்பனிகளினதும் நெருக்கமான பிடிக்குள் இந்திய முதலாளித்துவத்தை அனைத்துக் கொள்ளல். இரண்டாவது வழிமுறையே ஏகாதிபத்திய முகாமினது நோக்கமாகும். அதை நிறைவேற்றுவதற்கான மார்க்கமே முதலாவது வழிமுறையாகும்.

இலங்கையில் மேற்கொண்டது 1வது வழிமுறையே ஆகும். 1984—ல் இருந்து சிறிலங்கா ராணுவத்தை பலப்படுத்துவதிலும் அதை அமெரிக்க ராணுவத்தின் கூட்டாக ஆக்குவதற்குமான அனைத்து முயற்சிகளையும் எடுத்தது. சிறிலங்கா ராணுவத்தையும் பாக்கிஸ்தான் ராணுவத்தையும் இணைந்த ஒரு இராணுவக் கூட்டை உருவாக்கவும் முற்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இது நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதினில் இந்திய மத்திய அரசில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியில் எந்த அணியை ஆதரிப்பது என்பதில் இருவல்லரசுகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது.**

இந்திய முதலாளித்துவ அரசியல் தலைவர்களின் பின்னால் ஒருவித வால்பிடி போக்கை கையாளும் சோவியத் அரசுக்கு ராஜீவை ஆதரிப்பதை தவிர மாற்றுவழி எதுவுமே இருக்கவில்லை. ஆனால் ஏகாதிபத்திய முகாமின் தலைமையான அமெரிக்காவோ தனது CIA அமைப்பின் மூலம் பல தலைகளை பந்தாடியது. தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்குடன் ராஜீவுக்கும் பல அரசியல் நிர்பந்தங்களை ஏற்படுத்தியது. ராஜீவும் ஒரு கறாரான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1987 எப்ரல் 18-ம் திகதி நடந்த காங்கிரஸ் செயற்கமிட்டி கூட்டத்தில் ராஜீவ் பெரும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளிபோல் தன்னைக் காட்டிக் கொண்டு உரையாற்றினார். மறைமுகமாக சி ஐ ஏ தன்னை ஆதரிக்க கோரினார். அதைத் தொடர்ந்து தனியார் துறையை ஊக்கப்படுத்த பல நடவடிக்கைகள் எடுத்தார். இதன் பின்னரே அமெரிக்க அரசு ராஜீவ் அணியை ஆதரிக்கும் முடிவை எடுத்தது. ராஜீவின் கரங்களை பலப்படுத்த ஆரம்பித்தது. தம்முடிவை தொடர்ந்தே சி.பி.எம். ராஜீவ் தலைமையை பகிரங்கமாகவே எதிர்க்கப் புறப்பட்டது. சர்வதேச விவகாரங்களில் வெற்றிக் கிரீடம் சூட்டுவது உள்நாட்டு அரசியலிலும் மதிப்பை ஏற்படுத்தும் அல்லவா? இந்திய - சிறிலங்கா உடன்படிக்கை இந்த வெற்றிக் கிரீடத்தில் ஒன்றாகும். அதே நேரத்தில் இலங்கையில் உத்தியோக பூர்வமாகவும் உத்தியோகப் பற்றற்ற முறையிலும் ஜே ஆருக்கு 1986 மார்கழி 19 ம் திகதி முடிவை நிறைவேற்ற அமெரிக்க ஆலோசனை வழங்கப்பட்டது. இது 1987 ஏப்ரலில் ஆகும். அத்துடன் 1987 ஜுன் 4 ம் திகதி இந்திய ஆயுதப்படை விமானப்பாதுகாப்புடன் விமானத்தில் இருந்து உணவுப் பொருட்கள் விசுரப்பட்ட நிகழ்ச்சியை அமெரிக்கா கண்டிக்கவில்லை. அமெரிக்க பிரதான அரசியல் நபர் ஒருவர் மனித உரிமைகள் மீறப்படும்போது நாடுகளிடையே நிலவும் பரஸ்பர உறவு பாதுகாக்கப்படத் தேவையில்லை, என்ற அர்த்தம் படக் கூறினார்.

ஐ. நா. சபையின் பாதுகாப்பு கவுன்சில் இந்த விடயத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதை அமெரிக்கா நிராகரித்தது. இந்திய அரசுடன் ஒத்துப் போகும்படி மீண்டும் உத்தியோகப் பற்றற்ற ஆலோசனை வழங்கப்பட்டது. பாக்கிஸ்தானோ, இஸ்ரேலோ, சீனாவோ, அமெரிக்காவோ எந்தவித எதிர்ப்பு நடவடிக்கையிலும் இறங்கவில்லை. மிக மென்மையான கண்டனங்களையே தெரிவித்தன.

இந்த நிலையில்தான் ஜே. ஆர். இந்திய இராணுவத்தை வரவழைத்தார், அந்நியப் பயிற்சியாளர்களின் செயற்பாட்டை குறைத்தார். பலரை வெளியேற்றினார். இந்திய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்க கூடிய முறையில் எந்த மூன்றாவது நாடும் இராணுவ தலையீட்டுக்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்று உடன்படிக்கையில் கையொப்பமிட்டார். உடன்படிக்கை எழுதி 24 மணித்தியாலங்கள் ஆகுமுன்பே ரீகன் இதைப் பாராட்டினார். எல். டி. டி. ஈ. ஆயுதங்களை ஒப்படைக்க சம்மதித்ததின் காரணமும் இது தானோ என்பது சந்தேகமே.

இந்திய—இலங்கை உடன்படிக்கையானது உள்ளர்த்தத்தில் உண்மையிலேயே இந்திய—இலங்கை அமெரிக்க உடன்படிக்கையேயாகும். அமெரிக்க ஆசியுடன் ராஜீவ் சூடிக்கொண்ட ஒரு கிரீடமே இந்த உடன்படிக்கையாகும்.

இந்திய பூர்சுவாக்கள் தெற்காசிய தொடர்பான அமெரிக்காவினதும் சோவியத் யூனியனினதும் கொள்கைகளை தனக்கு சாதகமாக பயன்படுத்தி தெற்காசியாவில் தனது மேலாதிக்கத்தை வளர்த்துக் கொள்கின்றனர்.

இலங்கையின் மேல் இது நிலைநாட்டப்பட்ட முறை ஏனைய தெற்காசிய நாடுகளுக்கு ஒரு நேரடி அச்சுறுத்தலாகும். ஆப்கானிஸ்தான் தொடர்பாக இந்தியாவுக்கும் அமெரிக்காவிற்கும் ஒரு உடன்பாடு வருமானால் பாக்கிஸ்தானையும் கூட இந்தியா, அமெரிக்க உதவியுடன் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திடும்.

தெற்காசியப் பிராந்தியங்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பு, நிலவுவது ஊக்கப்படுத்தப்படவும் இராணுவ முரண்பாடுகள் நிலவுவதும் தவிர்க்கப்படவும் வேண்டும். இந்து மகா சமுத்திரம் யுத்த சூனிய பிரதேசம் ஆக்கப்பட வேண்டும். இராணுவ மேலாதிக்க வல்லரசுகளின் போட்டிகளமாக தெற்காசியா மாறுவது தவிர்க்கப்படவேண்டும். இந்திய பூர்சுவாக்களின் அரசியல் அகராதியின்படி தெற்காசிய நாடுகள் அனைத்தும் இந்திய பூர்சுவாக்களின் நவகாலனியாக அவசியப்படின் காலனியாகக் கூட மாற்றப்பட வேண்டும், என்பதே பரஸ்பர அந்நிய ஒன்றிய ஒற்றுமையின் அர்த்தமாகும். இந்திய—சிறிலங்கா உடன்படிக்கை இதற்கோர் எடுத்துக் காட்டாகும். தமிழீழ மக்களின் முதுகில் குத்தியதற்காக மாத்திரமல்ல தெற்காசியாவின் தேசிய ஒடுக்குமுறையை மேலும் வளர்த்ததற்காகவும் இவ் ஒப்பந்தம் கிழித்தெரியப்பட வேண்டியதேயாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கழுகின் மயிலாட்டம்

இந்த
கோரச் சிங்கம்
தனது கோரப்பிடியை
எம்மீது இன்னும்
கூடுதலாக்கிக் கொள்ள
மயிலாய் ஆடத் தெரிந்த கழுகையும்
துணைக்கு அழைத்துக் கொண்டுள்ளது.

வெல்லத்தில் மொய்த்த
எறும்புகளாய்
எம் தேசத்தில்
வெள்ளை போர்த்திய
அந்தக் கழுகுகள்
எங்கும் தனது கால்களால்
ஊன்றியபடி
சொண்டுகளை கூர்மைபடுத்தும்

இன்றும் மேலாய்
நண்பனாய் வந்து
நமது தோள்களிலும்
உட்கார்த்து கொள்ளும்!
செத்தும்
சாகாமலிருக்கும்
எம் உடல்களை
கிண்டு தோண்டும்
இயந்திரமாக தானே
குருதி குடிக்க
இயன்ற வரையில்
துளையிடும்
தனக்கு முகமூடி செய்ய
எமது தோல்விகளையும்
உரித்துச் செல்லும்

போதாக் குறைக்கு
தனது
இறக்கையை விரித்து
இந்து மா கடலையே
மறைத்து
இருளில் மூழ்கடிக்க
முயற்சிக்கும்

இருப்பினும்
எமது
நீறுபூத்த கண்கள்
விழிப்புடனேயே இருக்கும்
அக்கினிச் சிவப்பு —மேலும்
அதிகரிக்க
அந்த இருளை
நிச்சயம்
சுட்டெரிக்கும்
சுடர்விடும்

—சுபா தினேஷ்
5-8-87

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோழரே!

துப்பாக்கியை உயர்த்தும்

வலது தோளில்

உதைப்பை வாங்கஏதுவா

நடுவில் உள்ள

கோட்டிடை வெளியில்

நேரே, நேராக மட்டும்தான்

பாரும்...

எதிரி தானே அது

வலது ஆள் காட்டி விரலை

பின்னோக்கி இழும்

சரியாகக் குறிபார்த்தால்

ஒரே குண்டே போதும்

தோழரே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்